★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELA NADU

Registered as a Newspaper at the General PostOffice
Sri Lanka under No QB/8945/78

மலர்: 20 தை 4 ஸபர் 16 இதழ் 337
யாழ்ப்பாணம் புதன்கிழமை 17-1-79

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS
RECEIVED 1979-1-17
PERIODICALS DIVISION
LIBRARY

# கோர பஸ் விபத்து! 37 பேர் மாண்டனர்!!

(மதுரை)

கேரளாவிலுள்ள இடுக்கி மாவட்டத்தில் நேற்று நிகழ்ந்த கோர பஸ் விபத்தில் 37 பேர் பலியானார்கள் காயமடைந்த 13 பேரில் சிலரது நிலை கவலைக்கிடமாக இருப்பதாக நேற்றிரவு அறிவிக்கப்பட்டது.

நேற்று அதிகாலை 5மணிக்கு தேனியிலிருந்து மூணுறு நோக்கி வந்துகொண்டிருந்த (மதுரை) பாண்டியன் போக்கு வரத்துக் கழக பஸ், பாதையைவிட்டு விலகி 400 அடி பள்ளத்தாக்கில் விழுந்தபோது பஸ்ஸி லிருந்த சாரதி உட்பட 35 பேர் ஸ்தலத்திலேயே பலியானார்கள்! இருவர், மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்கையில் உயிரிழந்தனர்.

இந்த பஸ், தமிழக அரசிற்குச் சொந்தமானதாகும்.

## தமிழாராய்ச்சி மகாநாடு மதுரைமாநகரில்!

# தமிழக அரசுக்கு பூரண ஆதரவு

# இலங்கைக் கிளை தீர்மானம்

## தரமான கலைஞர்களை அழைத்துச் செல்ல முடிவு

(யாழ்ப்பாணம்)

ஐந்தாவது அனைத்துலகத்தமிழாராய்ச்சி மகாநாட்டை அடுத்த வருடம் ஜுலையில் மதுரைமாநகரில் நடத்துவதென்றும், இம் மகாநாடு சம்பந்தமாக தமிழக அரசு மேற்கொள்ளும்சகல முயற்சிகளுக்கும் ஆதரவும் ஒத்துழைப்பும் நல்குவதென்றும் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளை தீர்மானித்துள்ளது.

வழமையான முக்கிய அம்சங்களுடன், ஈழத்தின்பாரம்பரிய கலை, கலாச்சாரங்களைப் பிரதிபலிக்கும் விதத்தில் சில நிகழ்ச்சிகளை மகாநாட்டுக்குக் கொண்டுசெல்வதென்றும் இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கைக் கிளையின் கமிட்டிக் கூட்டம் நேற்றுக்காலை தலைவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமையில் யாழ். அலுவலகத்தில் நடைபெற்றது இக்கூட்டத்திற்கு, வண. தனிநாயக அடிகளார், கட்டடக் கலைஞர் வி. எஸ். துரைராஜா, திரு. ச. அம்பிகைபாகன், டாக்டர் க. இந்திரபாலா, திரு. ஜேம்ஸ் இரத்தினம் திருமதி பாலகிருஷ்ணன், திரு இ. நமசிவாயம், திரு. க. சச்சிதானந்தன் ஆகியோர் சமுகமளித்திருந்தனர்.

அடுத்த ஐந்தாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டை லண்டனிலா அல்லது மதுரையிலா நடத்துவது பற்றி இக்கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது. லண்டனில் நடத்துவதன் மூலம் ஏற்படும் கஷ்டங்கள், சிரமங்கள் பற்றியும் செலவினங்கள் குறித்தும் அங்கத்தவர்கள் கருத்துத் தெரிவித்ததுடன்; இம்மகாநாடு பற்றி தமிழக அரசு இப்பொழுது காட்டிவரும் தீவிர அக்கறை பற்றியும். தமிழக அரசுக்கு இலங்கைக்கிளை அவசியம் அளிக்கவேண்டிய ஆதரவு, ஒத்துழைப்புக் குறித்தும் விரிவாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, அடுத்தமகாநாட்டை தமிழக அரசின் ஒத்துழைப்புடன் மதுரை மாநகரில் அடுத்த ஆண்டு ஜுலையில் நடத்துவதென்றும், இதுசம்பந்தமான முடிவை

[6-ம் பக்கம் பார்க்க]

## வீதியில் கண்டெடுத்த பணம் பொலிஸில்!

[கொக்குவில்]

வீதியில் கண்டெடுத்த 360 ரூபாவை வீட்டுப் பணியாள் அவரது எஜமானிடம் ஒப்படைத்தார். எஜமான் அப்பணத்தை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளார்.

திருநெல்வேலி மரக்கறிச் சந்தைக்கு, சென்று சாமான் வாங்கிக்கொண்டு வந்த இராஜேந்திரம் என்ற இளைஞர் வீதியில் 360 ரூபாவை கண்டெடுத்தார்,

வீடுசென்றதும், எஜமானை முன்னாள் மாவட்ட நீதிபதி எஸ். தம்பித்துரையிடம் ஒப்படைத்தபோது அவர் அப்பணத்தை பொலிசாரிடம் ஒப்படைத்தார்.

உரியவர் ஆதாரம் காட்டி பணத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ். பொலிஸ் அதிபர் திரு. ஈ. எக்கொடபிட்டியா தெரிவித்துள்ளார். [க]

## "இந்தியாவில் ஜனநாயகம் இருளடைந்து வருகிறது"!

---ராஜ்மோகன்காந்தி

[யாழ்ப்பாணம்[

"கடந்த இருபது மாதங்களாக இந்தியாவில் ஜனநாயகம் இருளடைந்து வருகிறது. ஒரு காலத்தில் ஆட்சியில் இருந்தவர்கள் இன்று பார்வையாளர்களாக இருக்கிறார்கள் இதனால் மக்கள் வேறு ஒரு நல்ல ஜனநாயக ஆட்சியை அமைப்பதற்கேற்ற சந்தர்ப்பத்தை எதிர்பார்க்கிறார்கள்" இவ்வாறு நேற்றுமாலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்நடைபெற்றகூட்டத்தில்தார்மீகபுனருத்தாரண இயக்கத் தலைவர் திரு. ராஜ்மோகன் காந்தி அச்சம் தெரிவித்தார்.

திரு. கு நேசையா தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. ராஜ்மோகன்காந்தி தொடர்ந்து பேசுகையில்,

"ஒரு மனிதன் எவ்வளவு

[6-ம்பக்கம் பார்க்க]

## "இந்நாட்டில் வாழும் மக்கள் பரஸ்பரம் விட்டுக்கொடுத்தால் எவ்வளவோ நன்மையுண்டு"

(யாழ்ப்பாணம்)

தனது ஊர், தனது உறவினர் எனச் சிந்திப்பவன் கட்டுப்பட்டவன் உலகத்தவர் எல்லோரும் என்று சிந்திப்பவனே புதிய மனிதன். புதிய மனிதனாகவேண்டும் என எண்ணும்போது பழைய மனிதன் அந்த எண்ணத்தை மடக்கிவிடுகிறான், அதனை மடக்கி புதிய மனிதனை உருவாக்க வேண்டும். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் அளிக்கப்பட்ட வரவேற்பின்போது, தார்மீக புனருத்தாரண இயக்கத் தலைவர் திரு. ராஜ்மோகன் காந்தி மேற்கண்டவாறு கூறினார்.

அதிபர் திரு. குமாரசாமி தலைமையில் நடந்த வரவேற்பில் திரு. ராஜ்மோகன்

[6ம் பக்கம் பார்க்க]

## 75,000 மாணவர் தோற்றுவர்

(கொழும்பு)

ஜி. ஸி. ஈ. உயர்தரப் பரீட்சை ஏப்ரல் மாதம் 5ம் திகதி முதல் 30ம் திகதி வரை நடைபெறவிருக்கிறது.

இப்பரீட்சையில் 75,000 மாணவர்கள் தோற்றுகின்றனர் (கை- இ)

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் காலயுத்தி வருஷம் தைமாதம் 6-ம் திகதி (19-1-1979) வெள்ளிக்கிழமை காலை 10-07-க்கும் 11-க்கும் இடையில் வரும் மீன லக்கின சுபமுகூர்த்தத்தில்

| எமது புத்திரன் திருநிறை செல்வன் **பத்மன்** அவர்களுக்கும் | எனது புத்திரி திருநிறை செல்வி **கலா** அவர்களுக்கும் |
|---|---|

யாழ்ப்பாணம், கே. கே. எஸ். வீதி, வண்ணை சிவன் கோவிலில் திருமணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் தாங்கள் குடும்பத்துடன் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

திருமதி யோ. சுப்பிரமணியம்
"குமரகோட்டம்"
மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை.

திரு. திருமதி கனகசுந்தரம்
19, பிரப்பங்குளம் வீதி,
யாழ்ப்பாணம்.

1322

உ

## திருமண அழைப்பு

நிகழும் காலயுத்தி வருஷம் தை மாதம் 6-ந் திகதி (19-1-79) வெள்ளிக்கிழமை காலை 9-30 மணிக்கு

| எமது மகன் திருநிறை செல்வன் **சிவரஞ்சன்** (கணக்காளர், இங்கிலாந்து) அவர்கட்கும் | எமது மகள் திருநிறை செல்வி **வரலக்ஷ்மி** அவர்கட்கும் |
|---|---|

திருநெல்வேலி வடக்கு, அரசடி அம்மன் கோவிலில் நடைபெறும் திருமண வைபவத்திற்கு, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தனிப்பட்ட அழைப்பு அனுப்பமுடியாததால் இதையே அழைப்பிதழாக ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

திரு. N. சிவசிதம்பரம் (இளைப்பாறிய உதவி ஆணையாளர், சந்தைப்படுத்தல்)
திரு. R. சிவசுப்பிரமணியம் (சட்டத்தரணி)

திருமதி. சிவசிதம்பரம்
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,

திருமதி. சிவசுப்பிரமணியம்
230, சேர்பொன்இராமநாதன் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

1340

# கோட்டு விற்பனவு விளம்பரம்

சரசாலை கந்தன் சரவணை — வழக்காளி

இல: 4403 எதிராக

சாவகச்சேரி பிலான் ஒழுங்கை,
சின்னத்தம்பி கந்தன் — எதிராளி.

சாவகச்சேரி டிஸ்திறிக் கோட்டில் இல: 4403-ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1979-ஆம் ஆண்டு ஜனவரி (தை) மாதம் 30-ஆம் திகதி (30-1-79) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

## தீர்வைத்தொகை

முதல்வட்டி ரூபாய் 3608-33 சதமும் இதில் ரூபாய் 2000/-க்கு 7-3-73 திகதி தொடக்கம் 4-6-73 திகதி வரைக்கும் 100க்கு 10வீத வட்டியும் பின்திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100க்கு 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு அறிவிக்கப்படும். இதில் ரூபாய் 2000/-ம மேலும் ரூபாய் 500/-ம் இறுபட்டது

## காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி சாவகச்சேரிக் கோவிற்பற்று சாவகச்சேரியிறை 'கொல்லன்திடல்' நிலப்பரப்பு 17. இதில் மேற்குப்பக்கமாக நிலப்பரப்பு 5-ம் மேற்படி கொல்லன்திடல் நிலப்பரப்பு 18. இதில் கிழக்குப் பக்கமாக நிலப்பரப்பு மூன்றும் இரு வகைக்கும் நிலப்பரப்பு எட்டு (8)ம் எல்லை: கிழக்கு, சின்னத்தம்பி சின்னையாவின் ஆதனம். வடக்கு; சிதம்பரப்பிள்ளை சிவசுப்பிரமணியத்திற்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம். மேற்கு: மூத்தவி அப்புக்குட்டிக்குரிய ஆதனம். தெற்கு: றோட்டு இதடங்கலும். இதில் சேர்ந்தவைகளும்.

முதற்பதிவு: F 368 / 44.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை,
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்,
ஏல விற்பனையாளரும்.

தெல்லிப்பழை.
16-12-78. 1333

# பிஸ்கால் விற்பனை

## யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

1. நாகலிங்கம் தர்மலிங்கமும,
2. பெண் சிவபாக்கியமும் இருவரும் - கந்தரோடை.

— வழக்காளிகள்

வழ. இல: எஸ்/ 2019. எதிராக

1. தம்பையா நடராசா அல்லது தம்பையா செல்லையாவும்
2. கேதாரம் சரஸ்வதியும் இருவரும் - மானிப்பாய்.

— எதிராளிகள்.

மேற்சொல்லப்பட்ட எதிராளிகளிடமிருந்து வெலியாத்தில் விபரிக்கப்பட்ட தொகைப்பணம் ரூபா 1000/-யும் மாதாந்த நட்ட ஈடாக ரூபா 50/-யையும் 1963-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 7-ந் திகதி தொடக்கம் சொல்லப்பட்ட ஆதனத்தில் இருந்து வெளியேறிய திகதி 1978-ம் ஆண்டு ஐப்பசி மாதம் வரைக்கும் அத்துடன் கோட்டுச்செலவு ரூபா 1463-76 சதத்தையும் அறவிடுவதற்காக கீழே விபரிக்கப்படும் ஆதனத்தின் சகல உரித்துக்களையும் 1979-ம் ஆண்டு மாசி மாதம் 14 புதன் கிழமை காலை 10-00 மணிக்கு சொல்லப்பட்ட ஆதனத்தில் இருந்து பகிரங்க ஏலத்தில் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற பிஸ்காலால் விற்பனை செய்யப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

## ஆதனமாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப்பகுதி மானிப்பாய் கோவில்பற்று மானிப்பாய் இறை "பூம்பந்தல்" வளவு நில. பர (2) இரண்டும் குளி 14. இதற்கு எல்லை கிழக்கு: ஒழுங்கை, வடக்கு: சின்னத்தம்பி பெண் நாகம்மாவின் ஆதனம், மேற்கு: குமாரசாமி பெண் நாகம்மாவின் உரிமைக்காரர்களின் ஆதனம், தெற்கு: சிதம்பரநாதன் பெண் சரஸ்வதியின் ஆதனம் இதடங்கலின் உட்பட்டவைகளுடன்.

P. பாக்கியநாதன்,
பிஸ்கால்.

மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.
10-1-79. 1321

# குஷிபா டிஸ்ரிபியூட்டஸ் லிமிடெட்

வெற்றிடங்கள்:

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மாவிட்டபுரம் கிளைகளில் தொழில்புரியக் கூடிய

1. விற்பனைப் பிரதிநிதிப் பயிலுனர்கள்
2. களஞ்சியபொறுப்பாளர்களும்/லிகிதர்களும்

ஆகக் குறைந்த கல்வித் தகைமைகள்:

1. க பொ. த. (சாதாரணம்) 3 விசேட சித்திகளுடன் எண்கணிதம் / கணிதம் உட்பட.
2. வயது 30க்குக் குறைவாக
3. ஆங்கில அறிவும், கணக்கு பதிவியலில் அனுபவம் இருத்தல் விசேட தகைமை என கணிக்கப்படும்.

விண்ணப்பம் செய்யவிரும்புவோர் 20-1-1 79 காலை 8 மணியளவில் கல்வி, நற்சாட்சிப் பத்திரங்களுடன் மாவிட்டபுரத்தில் அமைந்துள்ள டொலர் அலுமினியம் தொழிற்சாலை அலுவலகத்திற்கு நேரில் சமூகமளிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம். 1345

# பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

புன்னாலைக் கட்டுவன் புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த செல்லப்பா குமாரசாமி என்பவரின் மரணசாதனமில்லா மரணச்சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்

செல்லப்பா உருத்திரமூர்த்தி, புன்னாலைக்கட்டுவன் தெற்கு, புன்னாலைக் கட்டுவன்

மனுதாரர்

மரணசாதன நியாயாதிக்கம் இல. 27

எதிராக

1. இளையதம்பி வயித்திலிங்கம் கைம்பெண் சத்தியபாமா
2. செல்லப்பா மாணிக்கவாசகர்
3. செல்லப்பா மகள் சகுந்தலாதேவி எல்லோரும் புன்னாலைக்கட்டுவன் தெற்கு, புன்னாலைக் கட்டுவன்.

எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனமில்லா மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1979-ம் ஆண்டு மாசி மாதம் 23-ம் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்

நீதிமன்றக் கட்டளைப்படி
றி. ஜெயராசசிங்கம்,
பதிவாளர்.

1978-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 17-ம் நாளாகிய இன்று திகதியிடப்பட்டது.

என்னால் எழுதப்பட்டது:
செ. இராமலிங்கம்,
மனுதாரின் சட்டத்தரணி.
1330

# வெற்றுச் சாக்கு

5000 வெற்றுச் சாக்குகள் கேள்விப் பத்திரம் மூலம் விற்பனைக்கு உண்டு. கேள்விப்பத்திரம் மீளளிக்கப்படாத ரூபா. 2/- கட்டி சங்க அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். ரூபா. 100/- வைப்புப் பணம் செலுத்தவேண்டும். முடிவு திகதி 27-1-1979.

பொதுமுகாமையாளர்,
பூநகரி ப. நோ. கூ. சங்கம்,
1337 பூநகரி.

# பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(வரையறுக்கப்பட்டுள்ளது)

பருத்தித்துறை

## பகிரங்க ஏல விற்பனை

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மொத்த விற்பனைக் களஞ்சியத்திலிருக்கும் சுமார் 10,000 வெற்றுச்சாக்குகள் இனவாரியாக எதிர்வரும் 20-1-79ம் திகதி சனிக்கிழமைகாலை 9-00 மணியளவில் சங்கக்கட்டிடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

ஏலக்கூற்றில் வெற்றி பெறுவோர் ஏலக் கூற்றில் பெற்ற பொருட் பெறுமதியைஉடனே சங்கக் காரியாலத்தில் கட்டி ரசீது பெற்று தமக்குரிய பொருட்களை உடனே ஏற்றிச் செல்லல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்
15-1-79 1338

# மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்

## கேள்வி அறிவித்தல்

### பெரியகடை காலை குத்தகை 1979

கஸ்தூரியார் வீதியில் வண்ணான் குளத்திற் கருகாமையில் அமைந்துள்ள பெரியகடை காலையில் 01-02-1979 முதல் 31-12-1979 வரையிலான காலத்திற்கு கட்டணங்கள் அறவிடும் உரிமையை குத்தகையாகப் பெறுவதற்கான கேள்விகள் யாழ்ப்பாணமாநகராட்சி மன்ற ஆணையாளரால் 31-01-1979 புதன்கிழமை நண்பகல் 12-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விகள் மாநகர அலுவலகத்தில் வழங்கப்படும் பத்திரங்களில் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, கடித உறையினுள் வைத்து, அரக்கு முத்திரையிடப்பட்டு பதிவுத்தபால்மூலம் "ஆணையாளர், மாநகர அலுவலகம், யாழ்ப்பாணம்" என விலாசமிடப்பட்டு அனுப்பப்படல்வேண்டும். அல்லது கேள்விகளுக்கென ஆணையாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் இடப்படல்வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் "பெரிய கடைக் காலை குத்தகைக் கேள்வி—1979" என தெளிவான எழுத்தில் குறிப்பிடப் படல்வேண்டும்.

3. கேள்விப் பிணைப்பணமாக ரூபா 100/-ம் கேள்விப் பத்திரக் கட்டணமாக ரூபா 10/-ம் செலுத்தியதன் பேரில் 30-01-1979 பிற்பகல் 3-00 மணிவரை கேள்விப் பத்திரங்கள் மாநகர அலுவலகத்தில் வழங்கப்படும்.

4. கேள்விகள் 1978-க்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட குத்தகைத் தொகையான ரூபா 3519-00 க்கு குறைவாக இருத்தல்கூடாது.

5. மேலதிக விபரங்களை மாநகர அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

க. சிவஞானம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுலலகம்,
யாழ்ப்பாணம்.
15-01-1979. 1346

# பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(வரையறுக்கப்பட்டுள்ளது)

பருத்தித்துறை

## கேள்விப் பத்திரம்

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தில் சுமார் 5000 வெற்றுச்சாக்குகள் விற்பனைக்குண்டு. கேள்விப்பத்திரத்தை வைப்புட்டணமாக ரூபா 50/-ஐயும், கேள்விப் பத்திரத்திற்கு ரூபா 2/- ஐயும் கட்டி இக்கந்தோர் நேரத்தில் பொதுமுகாமையாளரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரம் பெறும் கடைசித்திகதி 27-1-79. கேள்விப்பத்திரம் 27-1-79ம் திகதிக்கு முன்பாக "பொதுமுகாமையாளர், பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம்" என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும் கேள்விப்பத்திரம் அனுப்பப்படும் தபால் உறையின் மேற்பக்க இடதுபக்க மூலையில் "வெற்றுச்சாக்குக்கான கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிடுவது அவசியம்.

பொதுமுகாமையாளர்
பருத்தித்துறை ப. நோ. கூ.
சங்கம்,
பருத்தித்துறை.
13-1-79 1339

# வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

# வரி விளம்பரம்

## பயிற்சி

வெல்டிங் (Electric Arc & Gas) இலெக்றிக் வயறிங், ரேடியோ (Transistor), Auto Electricians Certificate, Diploma in Building Technology முதலிய பயிற்சிகள், வெளிநாட்டு முறையில் நடாத்தப்படும். ஆங்கிலமும் மூதலுதவிப் பயிற்சியும் இலவசம். National Institutes, 57, பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம். 1291

## தேவை

கல்லூரிக்குச் சேர்ந்த பாடசாலை விவசாயப் பண்ணைக்கு தோட்டக்காரன் தேவை. தயவு செய்து நற்சாட்சிப் பத்திரத்துடன் 2 மணிக்கும், 4 மணிக்கும் இடையில் இம் மாதம் 22 ம் திகதி திங்கட்கிழமை வந்து பரி. யோவான் கல்லூரி காரியாலயத்தில் சந்திக்கவும். அதிபர், பரி. யோவான் கல்லூரி, யாழ்ப்பாணம். 1335

வட்டுக்கச்சி கட்சன் றோட் நாகதம்பிரான் ஆலயத்திற்கு நிரந்தர பூசகர் ஒருவர் தேவை. 25-1-79 ந் திகதிக்கு முன்னர் நேரில் வரவும். 1331

## விற்பனைக்கு

உன்னத பாவிப்பு நிலையில் உள்ள A. 30, E L 9553. தொடர்பு கொள்ளவேண்டியது: S. அரியரத்தினம், இலங்கை வங்கி, பருத்தித்துறை- தொலைபேசி - 511, பருத்தித்துறை. 1343

சேதமடைந்த காகித உறைகள், சுற்றுத்தாள்கள் மற்றும் சடம்புக் கயிறு ஆகியவற்றுக்கான

## கேள்விப் பத்திரம்

### காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை

காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலையில் கீழ்க் காணும் பொருட்கள் கேள்விபத்திரம் மூலம் விற்பனை செய்யப்படவுள்ளன.

1. 15763 சேதமடைந்த சீமெந்து அடைக்கும் காகித உறைகள்.
2. 2080 இறுத்தல் சுற்றுத்தாள்கள்.
3. 350 இறுத்தல் சடம்புக் கயிறு.

மேற்காணும் பொருட்களை வாங்க விரும்புவோர் அலுவலக நேரங்களில் எமது களஞ்சியத்தில் இவற்றைப் பார்வையிட்டு பொருட்களை வாங்கும் விலையினைக் (ஒரு இறுத்தல் இவ்வளவென) கோரலாம். விலைகோரும் கேள்வி விண்ணப்பப் பத்திரங்களை அரக்கு முத்திரையிடப்பட்ட தபாலுறைகளின் இடது பக்க மேல்மூலையில் "சேதமடைந்த காகித உறைகளுக்கான கேள்வி விண்ணப்பம்" எனக் குறிப்பிடப்பட்டு இம் மாதம் 25ம் திகதி பி. ப. 2-00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் எங்களுக்குக் கிடைக்கக்கூடியதாய் அனுப்பிவைக்க வேண்டும்.

மேலதிக நிபந்தனைகளையும், விபரங்களையும் காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை வழங்கல் பகுதியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

தொழிற்சாலை
முகாமையாளர்

காங்கேசன் சீமெந்துத்
தொழிற்சாலை.
காங்கேசன்துறை
1979-01-10 1325

# மக்கள் கருத்து

## ஒரு வழிக்கு ஒரு தொழிற்சங்கம் இலங்கைக்குப் பொருந்தாது

இலங்கையில் ஆயிரத்து அறுநூற்றுக்கு மதிகமான தொழிற்சங்கங்கள் இருக்கின்றன. ஒரே வழிச் சேவைக்கெனப் பல தொழிற்சங்கங்கள் இருப்பதாலேயே இவ்வாறு தொழிற்சங்கங்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. இதனால் அரசாங்கத்திற்குப் பெரும் தலையிடியாகவும், உண்மையான பிரச்னைகளுக்குத் தீர்வு காண முடியாத நிலையை உருவாக்குவதென்றும் தொழிற்சங்கங்கள் தனது உரிமைகளை வென்றெடுப்பதற்குத் தடையாக இருக்கின்றது என்றும், ஒரு வழிச் சேவைக்கு ஒரு தொழிற்சங்கம் இருப்பின் அந்தொழிலுள்ள தொழிலாளர்களுக்கு நலன் பயக்கும் என்றும் கருதுவதில் உண்மை இருந்தாலும் இலங்கையின் அரசியல் நிலை, இங்கு வாழும் சிறுபான்மைத் தொழிலாளரின் மொழிப் பிரச்னை தீர்க்கப்படாத நிலை ஆகிய சூழ்நிலையில் ஒரு வழிச் சேவைக்கு ஒரு தொழிற்சங்கம் ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்ட ஒரு அமைப்பாகவும் சிறுபான்மைத் தொழிலாளர்கள் நசுக்கப்படுவதற்கு உரிய ஆயுதமாகவும் விளங்கச்செய்யும்.

இலங்கையில் ஒரு வழிச் சேவைக்கு ஒரு தொழிற்சங்கம் அமைக்கப்படுவது பற்றி அரசாங்கம் ஆராய்ந்து கொண்டு இருக்கும் இவ்வேளையில் அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா ஆகிய ஜனநாயக நாடுகளில் உத்தேச தொழிற்சங்க கட்டுப்பாடுகள் இன்னும் நடைமுறையில் இல்லை என்பதை நினைவுகூர வைக்கின்றேன். அதே ஜனநாயக வழிமுறை ஆட்சி செயல்படும் இங்கு இக்கட்டுப்பாடு அவசியமில்லை எமது சமூகத்தைச் சேர்ந்தவர்களைப் பாதிக்கும் இந்த அமைப்பைப் பற்றிச் சற்று ஆராய்வோம்.

### ஜனநாயக உரிமை

இலங்கை ஒரு ஜனநாயக நாடு, தார்மிக சமுதாயத்தை உருவாக்கும் நாடு. தனி மனித உரிமைகளுக்குப் பாதுகாப்புக் கொடுப்பதாக அரசாங்கம் கூறுகிறது, இந்நாட்டில் பல அரசியல் கட்சிகளும் சுதந்திரத்துடன் இயங்க உரிமை உண்டு. எனவே பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கங்கள் அத்தனையும் தமது நலன்பேணிக் காப்பதற்காக தமது உரிமைகளை வென்றெடுப்பதற்காக நூறு பேராக இருந்தாலும் சரி, ஆயிரம் பேராக இருந்தாலும் சரி அவர்கள் தனித்து இயங்கும் சுதந்திரத்தை ஜனநாயகத்திற்கு மதிப்பளித்து இப்பொழுது இயங்குவது போல் சுதந்திரமுடன் இயங்க விடுவதே உகந்ததாகும். அன்றேல் ஜனநாயக உரிமை மீறப்படும் செயலாகும்.

### அணிசேராக்கொள்கை

உலகத்தின் வேறுபல நாடுகளில் அரசியல்தொழிற்சங்கக் கொள்கைகள் இந்நாட்டின் பெரும்பான்மைத்தொழிற்சங்கங்களில் வேர் ஊன்றி இப்பொழுது இவ்வித சங்கக் கட்டுப்பாடு நமது நாட்டின் அணிசேராக் கொள்கையை மாசுபடுத்திவிடும் எனக் கருத இடமுண்டு. அத்துடன் அகில உலகத் தொழிற்சங்கக் குழுவிலுள்ள சித்தாந்த நோக்குடன் செயல்படும். (I. C. F. T. U) சர்வதேச சுதந்திர தொழிற்சங்க சம்மேளனம் (W.F.T.U) உலகத்தொழிற்சங்க சம்மேளனம் ஆகிய இரு மாபெரும் உலக இயக்கங்கள் இங்குள்ள சில தொழிற்சங்கங்களைத் தம்முடன் இணைத்துச் செயல்படும் இவ்வேளையில் இவ்விரு அணியிலும் சேராமல் உள்ளவைகள் மிகச் சிலவானதாகவும், சிறுபான்மையாளராகவும் உள்ளதால் தொழிலாளர் மத்தியில் விதண்டாவாதங்களையே ஏற்படுத்திவிடும்.

### மனித உரிமை பிரகடனம்

ஐக்கியநாடுகள் பொதுச் சபை சாசனத்தின் மனித உரிமைப் பிரகடனம் உறுதியுரை 23 (4) பிரிவின்படி ஒவ்வொருவருக்கும் தத்தம் தமது பாதுகாப்பதற்கென தொழிற்சங்கங்களை அமைப்பதற்கும் அவற்றில் சேருவதற்குமான உரிமை வழங்கப்பட்டுள்ளன. இவ்வுரிமையை 1978-ம் ஆண்டில் ஆக்கப்பட்டுள்ள எமது நாட்டு அரசியல் சாசனத்திலும் சேர்க்கப்பட்டுள்ளது. அத்துடன் 20 (2)ம் பிரிவின்படி ஒரு சங்கத்தில் சேர்ந்தவராக இருப்பதற்கு எவரும் கட்டாயப்படுத்தலாகாது. எனவே ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற்சங்கம் என அமைக்கப்பட்டால் ஒரு தொழிலாளியோ அல்லது குழுவோ தமது நலனை இச்சங்கத்தின் மூலம் பேண முடியாத காலகட்டத்தில் அவர்களது நலனைப் பேணக்கூடிய முறையில் பிறிதொரு தொழிற்சங்கத்தை அமைக்கத் தடையாக இருப்பது மனித உரிமைப் பிரகடனத்திற்கு முரண்பட்டதாக உள்ளதாகும். ஆகவே விரும்பும் ஒரு தொழிற்சங்கத்தின் கீழ் அங்கம் வகிக்கும் பெரும் உரிமையை ஒரு தொழிலாளிக்கு மறுப்பது தனி மனிதனது உரிமையைப் பறிப்பதாக மட்டும் அல்லாது தொழிலாளர் மத்தியில் இப்பொழுது உள்ள ஐக்கியத்தையும் சிதைத்து அமைதியின்மையை உருவாக்கி அதன் மூலம் நாட்டின் வளர்ச்சியையும் தடைப்படுத்திவிடும் என அஞ்சவும் இடமுண்டு.

### ஒரு கட்சி ஆட்சிக்கே பொருத்தமானது

ஒருகட்சி அரசு நடாத்தும் நாடுகளில் ஒருதொழிற் சங்க முறை இன்று அமுலிலுள்ளது, இங்கு ஏற்றத்தாழ்வுகள் மத, இன, மொழி வேறுபாடுகள், நாட்டார், நாடற்றோர் என்ற இழிநிலைகள், வேலையற்றோர் என்ற குறைபாடு, உழைப்பிற்கு ஏற்ற ஊதியமில்லை என்ற குறைபாடு. வாழ்க்கைச் செலவுக்கு போதவில்லை என்ற குமுறல்கள் இல்லை எனவே ஒரு தொழிலுக்கு ஒருதொழிற்சங்கம் என்ற நியதிக்கு உகந்த களம் ஏற்படவில்லை.

இன்று ஒரு தொழிலுக்கு ஐந்துக்கு மேற்பட்ட தொழிற்சங்கங்களும் உண்டு. இவற்றில் ஒன்று அல்லது இரண்டு தொழிற்சங்கங்கள் கூடிய அங்கத்தவர்களைக்கொண்டு இருக்கும். சில தொழிலுக்கு ஒரு சங்கத்தில் 75 வீதத்திற்கு மேற்பட்ட அங்கத்தவர்களும் ஏனைய சங்கங்களில் மற்றவர்களும் இருக்கிறார்கள். கொள்கை வேறுபட்ட இச்சங்க அங்கத்தவர்களை ஒருவழிக்கு ஒரு தொழிற்சங்கம்என்று ஒன்றுசேர்க்கும்போது கூடிய அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு தொழிற்சங்கமே திரும்பத் திரும்ப நிர்வகிக்கும் உரிமையைப் பெறச் செய்கின்றது. சிறியதொகையினராகக் கொண்டிருந்த தொழிற்சங்க அங்கத்தவர்கள் மாற்றுக் கருத்துக்களைக்கொண்டிருப்பார்களானால் அவர்கள் நசுக்கப்படவும் இடமுண்டு.

பல இன மக்களைக்கொண்ட இந்நாட்டில் அதிலும் இன, மத, மொழி பேதங்களில் நியாயமான நிரந்தரமான தீர்வு காணப்படாத இக்காலகட்டத்திலே ஒரு தொழி

(5-ம் பக்கம் பார்க்க)

## "இறைவழிபாடு இதய இருளகற்றி மேன்மை வாழ்வு அளிக்கிறது"

### காரைநகரில் தமிழக அறிஞர் பேச்சு

[யாழ்ப்பாணம்]

"கடவுள் வழிபாடு, மனிதனின் மனம், மொழி, மெய் ஆகிய முக்கரணங்களையும் தூய்மையோடு வைத்திருக்க உதவுகின்றது. மனம், கடவுளைச் சிந்திப்பதாலும், வாய் அவனை வாழ்த்துவதாலும், கரணங்கள், அவனை வழிபடுவதாலும் தூய்மையடைகின்றன. கடவுள் உலகில் மனிதனையே மேம்பட்டவனாகப் படைத்திருக்கிறான். மனமும் பேசும் திறமும், நினைத்த செயல்களைச் செய்யும் கரணங்களும் மனிதனுக்கே கடவுளால் தரப்பட்டுள்ளன. இம்முக்கரணங்களாலும் நாம் கடவுளைப் பக்தி செய்யவேண்டும். வாழ்த்த வாயும், நினைக்க மடநெஞ்சும், தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை நாம் வழிபடுவது அவசியமாகும்."

ஈழத்துச் சிதம்பர விழாவில் தமிழகப் பெரியார் 'வித்துவான் வி. சா. குருசாமிதேசிகர் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக விரிவுரையாளர் கலாநிதி அ, சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"விலங்குகளும், பறவைகளும் அன்றையிலிருந்து இன்று வரை எந்த அறிவு வளர்ச்சியும் அடையவில்லை. மரக்கிளையில் குச்சிகளைப் பொறுக்கிக் கூடுகட்டி வாழும் பறவைகள் இன்று வரை அதையே செய்துவருகின்றன. காடுகளிலும், குகைகளிலும் வாழும் மிருகங்கள் இன்று வரை எந்த முன்னேற்றத்தையும்அடையவில்லை. ஆனால் மனிதன் காட்டுமிராண்டியாகத் தோன்றி, இன்று தம் மதியூகத்தால் சந்திரமண்டலத்தில் காலடி வைக்கத் தொடங்கிவிட்டான். அறிவு வளர்ச்சியால் அவன் கண்ட சாதனைகள் எண்ணற்றவை. அதனால் உலகிலுள்ள உயிர்களில் மனிதனே மேம்பட்டவனாவான். மனிதன் உயர்வதற்குக் காரணம், அவனுக்குக் கடவுளால் கொடுக்கப்பட்ட மனம், மொழி, மெய் ஆகிய முக்கரணங்களுமேயாகும் எனலாம்.

பன்னிரு திருமுறைகளும் கடவுளை வழிபடுதற்குரிய சிறந்த தோத்திரங்களாகும். அவற்றுள் நம் திருவாசகம், நம் ஊனினை உருக்கி, உள்ளொளி பெருக்கும் அருள் ஆற்றல் பெற்ற உயரிய நூலாகும்.

"திருவாசகத்தில் திருவெம்பாவையே சிறந்தது. மார்கழித் திருவாதிரைக்கு முன் பத்து நாட்கள் ஏனைய திருமுறைகளை ஓதாது திருவெம்பாவையையே ஓதுதல்வேண்டுமென்பது சமய மரபு திருவெம்பாவை, பெண்கள் அம்பிகையைக் குறித்த நோக்கும் நோன்பை அடிப்படையாகக் கொண்டது.

"நாடு மழை பொழிந்து செழிக்கவேண்டும் என்பதும், தங்களுக்கு நல்ல கணவன்மார்கள் கிடைக்கவேண்டும் என்பதும் இந்த நோன்பின் குறிக்கோளாகும். திருவெம்பாவையின் உயிர்ப் பாடலாக விளங்குவது, உன்கையில் பிள்ளை என்னும் பாடலாகும், "திருப்பள்ளியெழுச்சி, திருரோதானசத்தி என்ற தலைப்பை உடையது. தம் உள்ளத்தில் அறியாமை அகன்று, அருளொளி பெருகித் தோன்றுவதாகும்.

"திருவெம்பாவையில், ஒன்பதாம், பத்தாம் பாடல்கள் பெண்களின் சங்கற்பத்தைத் தெரிவிப்பன. தாமரையும், நீலோற்பலமும் சேர்ந்து மலர்ந்துள்ள தடாகம் அப்பெண்களின் கண்களுக்குச் சிவபெருமானும், பார்வதியும் போலத் தெரிகிறது.

"வானவீதியில் தோன்றும் மழை அம்பிகையின் வடிவம் போலவும், மின்னல் இடை போலவும், இடி சிலம்பொலி போலவும், வானவில் புருவம் போலவும், மழைநீர் அன்னையின் அருள்வெள்ளம் போலவும் இருக்கின்றது எனவும் மணிவாசகர் தரும் பாடல் பக்தி பரவசம் மிகுந்தது" என்றார். (உருத். நி-உ)

---

லுக்கு ஒரு தொழிற் சங்கம் நல்ல பலனை அளிப்பதைவிட தீமையும், சிறுபான்மையினர் தொழிற் பாதுகாப்பிற்கு உத்தரவாதமின்மையும் நிச்சயம் ஏற்பட இடமுண்டு. உதாரணமாக 'சிங்கள மொழிச் சட்டம்' வந்தபொழுது சிறுபான்மைத் தமிழர்களும் அங்கத்தவர்களாகக் கொண்டு ஒரு வழிக்கு ஒரு தொழிற்சங்கமாக "அரசாங்க லிகிதர் சேவைச் சங்கம்' இருந்தபோது அச்சட்டம் தமிழ் தொழிலாளரைப் பாதித்தபொழுது அச்சங்கம் குரல் கொடுக்க மறுத்துவிட்டது. இதனால் சிறுபான்மைத் தமிழர் தமது பாதுகாப்பிற்காக 'அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தை' அமைத்து, அரசகரும மொழிச் சட்டத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, தற்காலிக நிவாரணங்களைப் பெற்றும் நிரந்தரமான நிவாரணங்களைப் பெற தொடர்ந்தும் போராடிவருகிறது.

செல்லையா மெற்றூஸ்
மயில்.
செயலாளர்
அ. எ. வி. ச. யாழ். கிளை.

## பிறர்க்குழைத்துத் தேய்ந்தவர் கொக்குவில் 'தம்பி'



கொக்குவில் கந்தையா பவளம் தம்பதிகளுக்கு மைந்தனாக 12-9-1921ல் தோன்றிய ஆறுமுகம் தம்பி சற்றில் 7-1-78ல் மறைவதற்குள் ஊருலகம் அனைத்துக்கும் செல்லத் "தம்பி, யாகிவிட்டார். அவருடைய நடத்தையால் இனிய சுபாவத்தால், அன்பினால், பரோபகாரத்தால்.

கொக்குவில் இந்துக்கல்லூரியிலும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிலும் கல்வி பயின்ற இவர் இளமையிலேயே புகையிரத இலாகாவில் உபபுகையிரத நிலைய அதிபராக பதவியேற்றார். வெறும் கந்தோர் வேலையுடன் நின்றுவிடாமல் சமய, சமூகப் பணிகளிலும் சென்ற இடமெல்லாம் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். அநுராதபுரம், சாவகச்சேரி, தலைமன்னார். கண்டி, வெள்ளவத்தை, நுவரேலியா, மருதானை என்றெல்லாம் இவர் செல்வாக்கும் புகழும் பரவியது. படிப்படியாக பதவி உயர்வுகளும் கைகூடின. ஆனால் அதிகார போதையில்லை, பதவி வெறியில்லை, உயர்ந்தவன் என்ற மமதையில்லை, தான் என்ற அகங்காரமில்லை, அந்தஸ்துப் பெருமையில்லை, திமிரில்லை, ஆணவமில்லை. அடக்கமும் எளிமையுமே அவரிடம் எவரையும் ஈர்த்த காந்தசக்தியாகும்.

கமலாம்பிகை என்னும் மங்கை நல்லாளைக் கைப்பற்றி இவர் நடாத்திய இல்வாழ்க்கை வள்ளுவன் கூறிய "இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு" என்பதற்கமைய சிறந்திருந்தது.

இவர்களுடைய வீட்டுவாசல் என்றுமே திறந்திருக்கும். சனசந்தடிக்கு குறைவிராது. பெரும்பாலும் நண்பர்கள், உறவினர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியூரிலிருந்த 'தம்பி'யை நம்பியே பயணம்செய்வார்கள். அப்படிப்பட்டவர்கள் அனந்தம். அவர்களை வரவேற்று, ஆசுவாசப்படுத்தி, வந்த கருமம் பற்றி விசாரித்து கடைசியாகத் தம்முடைய காரிலேயே போகவேண்டிய இடங்களுக்கெல்லாம் அழைத்துச்சென்று - ஒரே ராஜோபசாரம்தான் ஒருவருக்கா, இருவருக்கா? ஒருநாளா, இரண்டு நாளா?

காலையில் பத்திரிகை படிப்பார், வானொலிச்செய்தி கேட்பார். வெறும் புதினம் அறிய மட்டுமல்ல திருமண அழைப்பு, மரண அறிவித்தல், பதவிஉயர்வு யாராவது தெரிந்தவர்களுக்கு என்றால் போதும் - மறுநாளுக்கிடையில் தந்தியோ தபாலோ, அஞ்சலட்டையோ அவர் வீட்டுக்குப் போய்ச்சேரும். நேரில் போகவேண்டிய அளவுக்கு நெருக்கம் என்றால் தூரந் தொலைவைப் பார்க்கமாட்டார் உடனே பிரயாணத்துக்கு 'ரெடி'யாகிவிடுவார்.

பிறருக்குழைத்தே தம்முடலைத் தேய்த்துக்கொண்டார் பிறருக்கு ஒளிகொடுத்து தாமே உருகியழிந்த மெழுகுதிரி என்று சொன்னால் இவர் விஷயத்தில் அது வெறும் ஒப்பாசாரமாகாது. புகையிரத திணைக்களத்தில் மிக உயர்ந்த அதிகாரி ஒருவர் கொஞ்சக்காலம் கட்டாயஓய்வில் நிறுத்தப்பட்டிருந்து பின்னர் மீண்டும் பதவிபெற்றார். அவர் பிரமுகர்கள் பலருடன் மருதானை நிலையத்தைப் பார்வையிட வந்தார். தம்பியைத் தூரத்திலேயே கண்டதும் மற்றவர்களை உதறிவிட்டு தம்பியிடம் தனியே போனார். "தம்பி, நீதான் தாழ்விலும் வாழ்விலும் ஏற்ற உத்தமன். நான் வீழ்ந்துகிடந்தபோதும் வருடாவருடம் நத்தார் வாழ்த்து தவறாமல் அனுப்பியவன் நீ மட்டும்தான். அதிகாரத்தில் இருந்தபோது போற்றிக்கொண்டாடியவர்கள் என்னை இலகுவில் மறந்துவிட்டார்கள்" என்று கூறிக் குதூகலித்தார்.

இல்லாமலா இறுதியாத்திரை புகையிரதம் வெள்ளைக் கொடி தாங்கி அதுவே கூவியழுவதுபோல் ஒலித்துக்கொண்டு 'ஹெலிக்கோப்டர்' வானிலிருந்து மலர்தூவ. மருதானையிலிருந்து புறப்பட்டது? மனித நன்முத்து ஒன்று உடைந்து விட்டது. செப்பனிட முடியுமா? இன்னொன்றைப் பெற முடியுமா? இப்படியெல்லாம் ஏங்குகிறவர் அவருடைய துணைவியார் மட்டுமல்ல, அவரையறிந்த எல்லாரும்தான்.

- "பார்த்திபன்"

# கம்போடிய விவகாரம்: அணிசேரா நாடுகள் பிரேரணையை ரஷ்யா 'வீட்டோ' செய்தது

## தடுப்பு அதிகாரம் 111-வது தடவையாக பிரயோகம்.

நியூயோர்க், ஜன 16

கம்போடியாவிலிருந்து சகல வெளிநாட்டுத் துருப்புக்களும் வெளியேறவேண்டும் என்று ஏழு அணிசேராநாடுகள் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் கொண்டு வந்த பிரேரணையை சோவியத் யூனியன் தனது வாக்குத்தடுப்பு அதிகாரத்தைப் பாவித்து நிராகரித்தது.

இத்துடன் சோவியத்யூனியன் தனது "வீட்டோ" அதிகாரத்தை ஐ நாவில் 111 தடவைகள் பாவித்துள்ளது.

பங்களாதேஷ் பொலிவியா ஜமேய்க்கா குவெய்த் ஸம்பியா உட்பட ஏழு அணிசேராரநாடுகள் கொண்டுவந்த இந்தப் பிரேரணையை பிரிட்டன், அமெரிக்கா, சீனு, பிரான்ஸ், நைஜீரியா ஆகிய நாடுகளும் ஆதரித்தன.

கம்போடியாவில் உடனடியாக யுத்த நிறுத்தம் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் கம்போடிய . உள்விவகாரத்தில் வெளிநாடுகள் தலையிடக்கூடாதென்றும் இப்பிரேரணையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. [இ]

## அச்சுவேலி கார் கடத்தல் ஈவினையில் மீட்பு

[யாழ்ப்பாணம்]

அச்சுவேலியில் கார் ஒன்று இனம்தெரியாத நபர்களால் கடத்தப்பட்டுள்ளது.

இக்கடத்தல் சம்பவம் பொங்கலன்று மாலை அச்சுவேலியில் நடைபெற்றது. வல்வெட்டித்துறைப் பொலிசாருக்குக்கிடைத்த தகவலைத் தொடர்ந்து ஈவினை என்னுமிடத்தில் அநாதரவான நிலையில் இக்கார் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. காரைக்கடத்தியவர்கள் எவரும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

கார்ச்சாரதி பொ. புஷ்பராஜா பொலிஸாருக்கு அளித்த வாக்குமூலத்தில் காரைக் கடத்தியவர்கள் றிவோல்வர் வைத்திருந்ததாகத் தெரிவித்துள்ளார்.

[கொக்குவில் நிரு.]

## இன்றைய இராசிப்பலன்

தை மாதம் 4-ந் திகதி

செவ்வாய்க்கிழமை (17-1-79)

**மேடம்:-** இரக்க சிந்தை மேலோங்கும். பிறருக்கு உதவுவதில் மகிழ்ச்சியடைவீர்கள். பிதாவழிச் சுகத்திற்கும் இடமுண்டு. இன்று சுகபோக நாள்.

**இடபம்:-** பயன்தரும் சம்பவம் இன்று இடம்பெறும். எதிரிகள் மத்தியில் ஏற்படும் மனமாற்றம் உங்கள் செல்வாக்கை வளர்க்கும். வாழ்க்கையில் சுவையான நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

**மிதுனம்:** கூட்டு வியாபாரத்தில் நன்மையுண்டு. கடமையில் ஆர்வம் பிறக்கும். பெரியோர் ஆதரவும் கிடைக்கும். பொருள் வரவிற்கும் இடமுண்டு.

**கடகம்:-** தொழில் நஷ்டத்திற்கு இடமேற்படும். சிலருக்கு உடல்நலமும் பாதிக்கப்படலாம். உணவு விடயத்தில் கவனம்வேண்டும். செலவினங்களைக்கட்டுப்படுத்திக் கொள்ளவும்.

**சிங்கம்:-** சிந்தனையின் தாக்கம் உங்களை சிந்திக்கவைக்கும். இன்று வைத்தியச் செலவுக்குமிடமேற்படும். அவசர போக்கைத் தவிர்த்துக் கொள்ளவும்.

**கன்னி:-** நிதியில் அபிவிருத்தியுடன் நிம்மதி பிறக்கும். தானியவிருத்திக்கும் இடமுண்டு. இல்லத்திலும்

(5-ம் பக்கம் பார்க்க)

## நஞ்சுஉணவு: 1000 பேர் ஆஸ்பத்திரியில்

புதுடில்லி, ஜன.16

ஆந்திரப்பிரதேசத்தில் விஜய வாடாவுக்கு அருகில் நஞ்சு உணவை உட்கொண்ட 1000 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 100 பேரின் நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது என டாக்டர்கள் தெரிவித்தனர். [இ]

## பிரிட்டிஷ் ரயில் சாரதிகளும் வேலைநிறுத்த முஸ்தீபு

### பங்கீட்டு முறையில் சீனி; அரசியல் நெருக்கடி அபாயம்

லண்டன், ஜன. 16

பிரிட்டனில் லொறிச்சாரதிகளின் வேலை நிறுத்தம் தொடர்ந்து நடைபெறுவதை அடுத்துப் பெரும் நெருக்கடி தோன்றியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளையில் ரயில் சாரதிகளும் வேலைநிறுத்தத்தில் குதிக்கத் தீர்மானித்துள்ளனர்.

அதிக சம்பளம் கோரியே இவர்கள் வேலைநிறுத்தஞ் செய்யத் தீர்மானித்துள்ளனர்.

இம் மாதம் 18ந் திகதி ரயில்வே ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் குதிக்க முடிவு செய்துள்ளனர்.

ரயில்வேச் சாரதிகள் வேலைநிறுத்தத்தில் குதிக்கும்பட்சத்தில் பிரிட்டனில் பெரும் அரசியல் நெருக்கடி தோன்றுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

### பங்கீடடு முறையில் சீனி, பட்டர்

லொறிச் சாரதிகளின் வேலை நிறுத்தம் தொடர்வதால் அநேகமான கடைகளில் சீனி, பட்டர் ஆகிய பொருட்கள் பங்கீட்டு முறையில் விநியோகிக்கப்படுகின்றன. (இ

## லொறிக்காலை நவீனமாகும்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியிலுள்ள லொறிக்காலை நவீனமுறையில் அமைக்கப்படவிருக்கிறது.

லொறிக் காலைக்கும் குளத்திற்குமிடையில் பெரும் மதிற்சுவர் ஒன்று கட்டப்படவிருக்கிறது. வேலை தற்பொழுது நடைபெற்று வருகின்றன. [க]

# எகிப்தில் மன்னர் ஷா

## சதாத்துடன் பேச்சு நடத்துவார்

கெய்ரோ, ஜன. 16

ஈரான் மன்னர் ஷா, எகிப்திய அதிபர் ஜனுப் அன்வர் சதாத்துடன் பேச்சு நடத்துவதற்காக எகிப்துக்குச் சென்றுள்ளார்.

எகிப்தில் தென்பகுதி நகரான அஸ்வானில் இன்று இவர்கள் சந்தித்துப் பேசுவார்களெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மன்னர் ஷா, எகிப்திலிருந்தே அமெரிக்கா செல்வாரென்று தெரிவிக்கப்பட்டது.

### நாடு திரும்பும் நோக்கமில்லை

இதேவேளையில் 15 ஆண்டுகளாக வெளிநாடுகளில் தங்கியிருக்கும் ஈரானிய சமயத் தலைவர் அயத்தொல்லோ கொமோனி தமக்கு உடனடியாக நாடு திரும்பும் நோக்கம் கிடையாதென அறிவித்துள்ளார். [இ]

# ஹிந்தி எதிர்ப்பு தினம் அனுஷ்டிப்பதை கைவிடுக

## எதிர்க்கட்சிகளிடம் எம்.ஜி.ஆர். கோரிக்கை

சென்னை, ஜன, 16

தமிழ் நாட்டில் இம் மாத இறுதியில் ஹிந்தி எதிர்ப்பு தினம் கொண்டாடுவதென எடுக்கப்பட்ட முடிவைக் கைவிடுமாறு தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் எதிர்க்கட்சிகளைக் கேட்டுள்ளார்.

இம்மாதம் 26-ம் திகதி தமிழ்நாடெங்கும் ஹிந்தி எதிர்ப்புத் தினத்தை அனுஷ்டிக்கும் கூட்டங்கள் ஊர்வலங்கள் ஆகியவற்றை திராவிட முன்னேற்றக்கழகம் ஏனைய எதிர்க்கட்சிகளுடன் இணைந்து நடத்துவதென தீர்மானித்துள்ளது.

மொழிப்பிரச்னை குறித்து ஆராயும் பொருட்டுத் தாம் சகல கட்சித்தலைவர்களையும் விரைவில் சந்திக்க இருப்பதால் எதிர்ப்புத்தினம் அனுஷ்டிப்பதைக் கைவிடுமாறும் திரு. எம். ஜி. ஆர் கேட்டுக் கொண்டார்

சென்னையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கேட்டுக்கொண்டார் [இ]

நூற்றுக்கு நூறுவீதம் சுத்தமான

நல்லெண்ணெய்

வைத்திய தேவைக்காகவும், குறிப்பாக இருதய நோயாளர்களுக்காகவும், சாப்பாட்டு உபயோகத்திற்காகவும் விசேடமாகத் தயார் செய்யப்பட்ட, அரசாங்க உத்தரவாதமுள்ள சுத்தமான நல்லெண்ணெயை விற்பனை செய்பவர்கள்:-

ஸ்ரீலங்கா ஆயுள்வேத மருந்துக் கூட்டுத்தாபனம்,
14-15, நவீன சந்தை, மேல்மாடி, யாழ்ப்பாணம்.

26 அவுன்ஸ் எண்ணெயின் விலை 21 ரூபா 60சதம் மட்டுமே

கையிருப்பு சொற்பமாகையால் உங்கள் தேவைக்கு முந்திக் கொள்ளுங்கள்.

மற்றும் சுத்தமான வேப்பெண்ணெய், இலுப்பை எண்ணெய், ஆமணக்கெண்ணெய் ஆகியவற்றையும் பெற்றுக்கொள்ளலாம்.

மிகவும் சிறந்த 'டானிக்' எமது தஷமூலாரிஷ்டம்

ஸ்ரீலங்கா ஆயுள்வேத மருந்துக் கூட்டுத்தாபனம், 14-15, நவீன சந்தை, மேல்மாடி, யாழ்ப்பாணம்.

## பரு. மக்கள் சந்தை அபிவிருத்தி துரிதம்

[புலோலி]

பருத்தித்துறை மக்கள் சந்தையில் குத்தகைமுறை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுப் பருத்தித்துறை நகரசபை விசேட ஆணையாளரின் நிர்வாகத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து தற்போது நகரசபையே நேரடியாகக் குத்தகையை அறவிட்டு வருகின்றது.

அத்துடன் இம்மக்கள் சந்தையின் உட்புறத்தில் மின்சார விளக்குகள் இல்லாமல் இருந்து வந்த குறைபாடுகள் நீக்கப்பட்டு பல புதிய மின்சார விளக்குகளும் பொருத்தப்பட்டு வியாபாரிகளினதும் பொதுமக்களினதும் ஒத்துழைப்புடன் சுத்திகரிக்கப்பட்டு புனரமைக்கப்பட்டுள்ளது,

இதனையடுத்து உதவி உள்ளூராட்சி ஆணையாளரும் பருத்தித்துறை நகரசபை விசேட ஆணையாளருமான திரு. அன்ரன் அல்பிரட்டை பாவனையாளர்களும் வியாபாரிகளும் பாராட்டியுள்ளனர். [உ]

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
கமலஹாசன் — ஆலம்
மன்மதலீலை

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
கமலஹாசன் - ஜெய்சித்ரா
சத்யம்

REGAL
(Jaffna) NOW SHOWING
Daily at, 4-30, 7-00 & 9-30 p m,
STEWART GRANGER
in
SODOM AND GOMMORAH
(Scope-Color)

சாந்தி (யாழ்நகர்) போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஆனந்தன், குமாரிசச்சு, அசோகன்
ஈ. வி. சரோஜா
வீரத்திருமகன் (புதிய பிரதி)
வெத்திலைபோட்ட பத்தினிப்பொண்ணு சுத்துதுமுன்னாலே

4-வது ஜனத்திரள் வாரம்
ஸ்ரீதர் (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் - சுஜாதா
மற்றும் பலர் நடித்த
உயர்ந்தவர்கள்

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சுஜாதா - கமலஹாசன் - சுமித்திரா
ல லி தா

லிடோ
(யாழ்.நகர்)
விஜயகுமார் - ஸ்ரீவித்யா - தங்கவேலு
ஆசை அறுபதுநாள்

மனோகரா
(யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த்— ஸ்ரீதேவி
கமலஹாசன்—வை. விஜயா
மூன்று முடிச்சு

4-வது ஜனத்திரள் வாரம்
வின்ஸர் போன்: 466
(யாழ்ப்பாணம்) தினசரி5 காட்சிகள் காலை10-00மணி
1-00 4-00 7-00 10-00
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)

தினசரி 4 காட்சிகள்
ராணி எம். ஜி. ஆர். - அஞ்சலிதேவி
(யாழ். நகர்) நடித்த
சக்கரவர்த்தித் திருமகள்
(புதிய பிரதி)

ராஜா தினசரி 4 காட்சிகள்
(யாழ்நகர்) விஜயகுமார், ஜெயசித்திரா. நாகேஷ், சுந்தரராஜன் நடித்த

பயணம்


## பால்மா விநியோகம்

[நெல்லியடி]

நெல்லியடி பட்டினசபை எல்லையுள் வசிக்கும் வறிய குடும்பத்தினைச் சேர்ந்த குழந்தைகளுக்கு பால்மா வகைகளை வழங்க நெல்லியடி பட்டினசபை நிர்வாகம் முன்வந்துள்ளது.

குழந்தைகளுக்கு வழங்கவென 50 கேஸ் பால்டின் வகைகள் கையிருப்பில் வைத்திருப்பதாகவும் ஒவ்வொரு சுகாதார பரிசோதனை நிலையங்களில் வைத்து இப்பால்மா டின்கள் வழங்கப்படும் எனவும் மேற்படி பட்டின சபைச் செயலாளர் திரு. வ. இராமச்சந்திரன் தெரிவித்தார். [உ]

## பண்டத்தரிப்பு வர்த்தகர் சங்கம்

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு வர்த்தகர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் பண்டத்தரிப்பு பட்டணசபை நூல் நிலைய மண்டபத்தில் திரு. மு. நடராஜா தலைமையில் நடைபெற்றபோது தெரிவு செய்யப்பட்ட புதுவருட நிர்வாகிகள் விபரம் பின்வருமாறு.

தலைவர் எஸ். சின்னராஜா உபதலைவர் மு. நடராஜா செயலாளர் பெனரிக் அல்போன்ஸ்சஸ் உபசெயலாளர் வி. மரியதாஸ் பொருளாளர் கே. மயில்வாகனம்.

8 உறுப்பினர்களைக் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. [உ]

## இன்றையபலன்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இனிமை தவழும். மகிழ்ச்சிகரமான நாள்.

துலாம்:- சகோதரவழியால் மனதில் சஞ்சலம் தோன்றக்கூடும். உள்வீட்டிலேயே பூசல் தலைதூக்கும். உஷாராக இருக்கவேண்டும்.

விருச்சிகம்:- ஊதியம் வளரும், உற்சாகம் பெருகும் தாய்வழி ஆதரவும் கிட்டும் உற்சாகமான தினம்.

தனுசு:- இதயத்தில் இனிமைதுளிரும். பகைவர்கள் பணிவர். வணிகர்களுக்கு வியாபாரவிருத்தியுண்டு. புத்திரர் புகழுக்கும் இடமுண்டு.

மகரம்:- திகைக்கவைக்கும் சம்பவம் இன்று இடம்பெறும். அரசினர் ஆத்திரப் பார்வையும் உங்கள் பக்கம் திரும்பலாம். போக்குவரத்து விடயத்தில் அதிககவனம் செலுத்தவும்.

கும்பம்:- குடும்பவழியால் மனதுக்கு நிம்மதி பிறக்கும் புதிய சூழ்நிலை உங்களுக்குப் புத்துணர்ச்சியை அளிக்கும் குடும்பவாழ்க்கை கற்கண்டு போல் இனிக்கும்.

மீனம்:- ஆயுதங்களுடன் பழகாது இருக்கவும். தொழில் துறையில் கவனம் செலுத்தவும் விசுவாசிகளாயின் சடங் படவும் நேரிடலாம்.

சோதிடகலாநிதி
திருமலை வேலுப்பிள்ளை


Rio (Jaffn )
Phone: 7607
Daily 4 Shows
POLICE PHYTHON 357
Coming soon
HIGH VELOCITY


மகாஜனக் கல்லூரியில்

## முதலாம் வகுப்புநிறுத்தம்: பெற்றோர் ஆட்சேபம்

[பண்டத்தரிப்பு]

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் இவ்வருடம் தொடக்கம் முதலாம் வகுப்பு நிறுத்தப்பட்டுள்ளது.

இதற்கு இப்பகுதியிலுள்ள பலபெற்றோர்கள் பலத்த ஆட்சேபம் தெரிவித்துள்ளனர் இக்கல்லூரியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள முதலாம் வகுப்பை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு காங்கேசன்துறை தொகுதி ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர் திரு. எஸ். கே. என். சிவராஜா கல்வி அமைச்சர் திரு. நிசங்கா விஜயவர்த்தனவுக்கு நேற்று அனுப்பி வைத்த அவசரத் தந்தி யொன்றில் கேட்டுக் கொண்டுள்ளார். [உ]

## வடமராட்சிப் பகுதியில் புகையிலை நோய்

### விவசாயிகள் கவலை

[நெல்லியடி]

வடமராட்சிப்பகுதிகளில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் விஸ்தீரணத்தில் நாட்டப்பட்ட புகையிலைக்கன்றுகளுக்கு குருத்தடைப்பு, அனிஞ்சில் குட்டைபோன்ற மாற்ற முடியாத நோய்கள் ஏற்பட்டுள்ளன.

இந்நோய் ஏற்பட்ட காரணங்களினால் விவசாயிகள் பெரிதும் கவலையடைந்துள்ளார்கள்.

கரணவாய் வடக்கு, தெற்கு பகுதிகளிலும், கரவெட்டி மேற்கு, நெல்லியடிப்பகுதி தோட்டங்களிலும் இந் நோயின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது. (உ)

நெல்லியடி பட்டினசபைக்கு

## ரூ. 3 லட்சம் செலவில் மாடிக்கட்டிடம்

[நெல்லியடி]

நெல்லியடி பட்டணசபையின் நிர்வாகத்தின் கீழுள்ள மத்திய சந்தையின் புதிய மாடிக்கட்டிட நிர்மாணவேலைகள் இன்னும் இரண்டு மாதங்களில் ஆரம்பிக்கப்படும் என மேற்படி பட்டணசபை செயலாளர் திரு வ. இராமச்சந்திரன் தெரிவித்தார்.

கட்டிடத்திற்குரிய மாதிரிப் படம் கொழும்பிலிருந்துவர்து விட்டதாகவும், செலவுத் தொகைகள் மதிப்பீடுசெய்யப்பட்ட பின்பு ஒப்பந்தங்கள் கோரப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

மேற்படி மத்திய சந்தைக் கட்டிடம் சுமார் 3 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படும் எனவும் தெரியவருகின்றது. [உ]

## நாடகப்போட்டி

[பண்டத்தரிப்பு]

இணுவில் கலைக்கதிர் இளைஞர் ஒன்றியம் இணுவில் வாணி போதனா நிலையத்தின் ஆதரவுடன் நாடகப்போட்டியொன்றை நடாத்தவுள்ளது. இப்போட்டி எதிர்வரும் மார்ச் மாதத்தில் நடைபெறவுள்ளது. [அ]


WANTED

Wanted an Experienced driver for Van and Passenger Car. Apply in writing with recent testimonials to-
Director.
JAFFNA COLLEGE TECHNICAL INSTITUTE
Vaddukoddai. 1336


## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

வழ. இல; MB/14054

1. ராமலிங்கம் சண்முகவடிவேலும் மனைவி
2. நாகம்மாவும் இருவரும் அம்மன் ரோட் வண்ணார்பண்ணை —வழக்காளிகள்

எதிராக

1. தம்பு பொன்னையாவும் மனைவி
2. துரையம்மாவும் இருவரும் 91/1, பிரவுண் ரோட், கலட்டி, வண்ணார்பண்ணை கிழக்கு —எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் MB. 14054ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1979ம் ஆண்டு (பெப்ரவரி) மாசி மாதம் 8ந் திகதி (8-2-79) வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபா 14,065ம் 5-9-73 தொடக்கம் 20-06-74 வரைக்கும் ரூபா 7900/-க்கு 12 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டால் வரி விதிக்கப்பட்ட செலவு ரூபா 618 சதம் 87 அதாவது நடைபெற்ற செலவு ரூபா 370 சதம் 90 நடைபெறவேண்டிய செலவு ரூபா 139 சதம் 16 மேலதிக சமயாசமயச் செலவு ரூபா 108 சதம் 81. முன் ரூபா 7000/- தீர்வையால் கொடுக்கப்பட்ட தொகை கழிவாக.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்றிக்குப், டிவிசனும் வண்ணார்பண்ணைக் கோ விற்பற்று வண்ணார்பண்ணை வடகிழக்கு இறை மூல்லைக்கட்டையடி பர நில. இலா $3\frac{1}{4}$ [மூன்றேகால்] எல்லை: கிழக்கு ரோட், வடக்கு: ஒழுங்கை, மேற்கு: வைரமுத்து நாகமுத்துவினுடையதும் மனைவி முத்துக்குமாருவின ஆதனம். தெற்கு: கந்தசாமி மனைவி நித்தியரஞ்சிதத்தின் ஆதனம். கல்வீடும் இரண்டு கடை அறைக் கட்டிடங்களும் மேற்குப் பக்க எல்லையில் இருக்கும் கிணற்றில் பங்கும் செய்பயிர் வான்பயிர்களும் இடங்களும்.

யாழ்ப்பாணக் காணிக்கந்தோர் பதிவு இல D320/1159

ஏ. ப. பி. எதிர்மன்னசிங்க
வெற்றீஸ் கொமிஷனரும்,
விலை மதிப்பாளரும்.

107, பெரியதெரு,
யாழ்ப்பாணம்.
7-12-78. 1332

# பிரதமர் 'பிரேமா'வுக்கு வி. என். நவம் பாராட்டு

(மட்டுவில்)

தமிழினத்தின் அடிப்படைப் பிரச்னையைப் பொறுத்தளவில் அரசாங்கத்திற்கும் எமக்கும் பல கருத்து வேறுப்பாடுகள் உண்டு. ஆனால் வீடமைப்புத்திட்டத்தைப் பொறுத்தளவில் நாம் பிரதமர் திரு. பிரேமதாசாவைப் பாராட்டாமல் இருக்க முடியாது. பிரதமரின் கடமையும் தொண்டும் புனிதமானது

இவ்வாறு சாவகச்சேரி எம். பி திரு வி. என். நவரத்தினம் பிரதமரைப் பாராட்டினர்

நாவற்குழியில் தேசிய வீடமைப்புத் திட்டத்தினுல் அமைத்துக் கொடுக்கப்பட்ட ஐந்து வீடுகளையும், சாவகச்சேரி எம் பி. திரு வி என். நவரத்தினம் ஐந்து ஏழைக் குடும்பத்தினருக்குப் பொங்கல் பரிசாக வழங்கினுர்.

இந்த வீடுகள் விநியோகிக்கப்பட்ட விழா பொங்கல் அன்று காலையில் நடைபெற்றது இந்த விழாவில் சாவகச்சேரி எம். பி. திரு வி.என். நவரத்தினம். யாழ்ப்பாணம் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், தென்மராட்சிப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். முருகவேள், யாழ் வீடமைப்பு திணைக்கள உதவி ஆணையாளர் திரு. எஸ். இராஜரத்தினம் விவசாய சேவை உதவி ஆணையாளர் திரு: செந்தில்நாதன் உட்பட பலர் கலந்து கொண்டனர். அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வீட்டைத் திறந்து வைத்தனர். குடியிருப்பாளர் பால் பொங்கவிட்டு புதுமனைப் பிரவேசம் செய்தனர்.

சாவகச்சேரி எம். பி திரு வி. என். நவரத்தினம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

'நமது தொகுதியிலுள்ள சகல மக்களும் ஏற்றத்தாழ்வின்றி ஒவ்வொருவரும் சொந்த வீடுகளில் குடியிருக்க வேண்டும் என்பது எனது பேரவா.

இப்புதிய வீடுகள் விநியோகம் செய்யப்பட்ட முறை மிகவும் நேர்மையான வழி. இதை நமது மக்கள் சகலரும் அறிந்ததே. ஆனுல் இங்கு குடியிருப்பவர்கள் ஒருவர்க்கொருவர் பரஸ்பர அன்புடன் ஒன்றுபட்டு வாழவேண்டும்.'

யாழ். வீடமைப்பு திணைக்கள உதவி ஆணையாளர் திரு. எஸ். இராஜரத்தினம் பேசுகையில், பிரதமர் வீடமைப்புத் திட்டத்தைப் பொறுத்தவில் பாரிய திட்டங்களை உருவாக்கியுள்ளார். அவர் ஏற்றத்தாழ்வு, சாதி, மத, மொழி வேறுபாடின்றி சகலருக்கும் ஒரே மாதிரியான திட்டத்தை அமைத்துள்ளார். இத்திட்டங்கள் அனைத்தும் விரைவில் செயற்படவுள்ளது இதனுல் இலங்கை மக்கள் அனைவரும் பெரிதும் பலனடைவார்கள், என்ருர்.

இதைத் தொடர்ந்து உதவி அரசாங்க அதிபர் திரு எஸ். முருகவேள், திரு. செந்தில்நாதன், யாழ்ப்பாணம் எம். பி. திரு வெ. யோகேஸ்வரன் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

இந்த விழாவுக்கு டாக்டர் சத்தியசிலன் தலைமைதாங்கினுர். (இ)

## "அன்பு, தாழ்மை, தூய்மை இவையே குறிக்கோள்"

### சென்ஜோன்ஸ் கல்லூரி மாணவர் மத்தியில் ராஜ்மோகன்

[அரியாலை]

"காந்திஜியும், ராஜாஜியும் சுமார் 50 வருடங்களுக்கு முன் இலங்கைக்கு வந்த பொழுது யாழ்ப்பாணத்திற்கு விஜயஞ்செய்து பேசிய அதே கல்லூரியாகிய பரி யோவான் கல்லூரியில், அவர்களின் பேரனுகிய நான் இன்று பேசுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். எமது தார்மீக புனருத்தாரண இயக்கத்தில் நிறம் முக்கியமல்ல. பண்பாடுதான் மிக முக்கியமாக அமைகின்றது. எமது இயக்கம் தூய்மை அன்பு, தாழ்மை, பிறர் சிநேகம் என்பவற்றை அடிப்படை நோக்கமாகக்கொண்டுஇயங்கி வருகிறது. இவற்றை அடிப்படையாகக்கொண்டு மனிதன் வாழ்ந்தால் மிக உயர்வடைவான்"

இவ்வாறு காந்திஜி, ராஜாஜி ஆகியோரின் பேரனும், ஹிம்மத் ஆங்கில இதழின் ஆசிரியரும், தார்மீக புனருத்தாரண இயக்கத்தின் உறுப்பினருமான திரு ராஜ்மோகன் காந்தி யாழ். பரியோவான் கல்லூரி பீற்ரே மெமோறியல் மண்டபத்தில் நடைபெற்ற மாணவர் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் திரு. சி. ஈ. ஆனந்தராஜா திரு. ராஜ் மோகனையும் அவரோடு கூட வந்த குழுவினரையும் வரவேற்றுப் பேசி வைபவத்துக்குத்தலைமை வகித்தார்.

திரு. ராஜ் மோகனின் குழுவினருடன் வந்திருந்த சுவிஸ்லாந்து நோர்வே ஸ்கொட்லாந்து இந்தியா இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்த குழுவினரால் இன்னிசை நிகழ்ச்சி நடாத்தப்பட்டது. இவர்களுடன் செல்வா அறங்காவல் குழுத் தலைவர் திரு. கு. நேசையாவும் வந்திருந்தார். [உ]

## சங்கானை கொலைவழக்கு:

# விசாரணை நடுவில் எதிரிகள் விடுதலை

(யாழ்ப்பாணம்)

சங்கானை கொலை வழக்கில் விசாரணை நடுவில் எதிரிகள் இருவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வழக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனுப் எம். ஜாமில் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

ஜூரி சபையினர் விசாரணையைத் தொடர்ந்து நடத்துவதில் பயனில்லையெனத் தெரிவித்ததைத் தொடர்ந்து நீதிபதி எதிரிகளை விடுதலை செய்தார்

இவ்வழக்கில் 1977-ம்ஆண்டு மார்ச் 7-ம் திகதி சங்கானையில் குணபாலசிங்கம் என்பவரைக் கொலை செய்ததாக கபிமன் யோகதாஸ், மாரிமுத்து யோகராசா ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணிகள் வி. என். நவரத்தினம், கே.பி.எஸ் வரதராசா, எஸ். சுரேந்திரன், வி தியாகேந்திரன் ஆகியோர் ஆஜரானுர்கள்.

அரசதரப்பில் சட்டத்தரணி எஸ்., ஸ்ரீரஞ்சன் ஆஜரானுர். (க)


## மரண அறிவித்தல்

### நாவற்குளி மயில்வாகனம்

யாழ்ப்பாணம் தட்டாதெரு ஐயனுர் கோயிலடியைச் சேர்ந்த நாவற்குளி மயில்வாகனம் காலமானுர். அன்னுரின் பூதவுடல் 33 ஐயனுர் கோவிலடி இல்லத்திலிருந்து கோம்பயன்மணல் மயானத்துக்கு தகனக் கிரியைகளுக்காக இன்று மாலை 4 மணிக்கு எடுத்துச் செல்லப்படும் தகவல்: ச இராசரத்தினம் (கிளை முகாமையாளர்—யாழ். ப. நோ. கூ. சங்கம் பொம்மைவெளி. 1349


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவ... மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு தைமாதம் 17-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper at the Geneial PostOffice

The Eelanaadu Post Bex No: 49, Telegram: Eelanaadu, Telephone: 389, Registered as a News paper in Sri Lanka.

## தமிழாராய்ச்சி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழக அரசுக்கு உடனடியாக அறிவிப்பதென்றும் கமிட்டி ஒருமனதாகத் தீர்மானித்தது.

### சில முக்கிய முடிவுகள்

நேற்று நடைபெற்ற கமிட்டிக்கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட சில முக்கிய தீர்மானங்கள் வருமாறு:

● மகாநாட்டிற்கு முதல் தரமான ஆராய்ச்சிக் கட்டுரைகளைச் சமர்ப்பிப்பது; இக்கட்டுரைகளை ஈழத்தில் பரவலாகப்பெறும்பொருட்டு நடவடிக்கைகள் மேற்கொள்வது ● ஈழத்தின் தலைசிறந்த எழுத்தாளர்களின் ஆக்கங்களைச் சமர்ப்பிப்பது; இதற்குத் தேவையான புத்தகங்களை சேகரிப்பது ● சிறந்த கலைஞர்களை அறிஞர்களை அழைத்துச் செல்வது ● ஈழத்தின் பாரம்பரிய கலை, கலாச்சாரங்களைப் பிரதிபலிக்கும் நாட்டியம், நாடகம், நாட்டுக்கூத்து, வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளைக் கொண்டு செல்வது ● ஈழத்தின் நீண்ட வரலாற்றை எடுத்தியம்பும் வகையில் புதைபொருள்கண்காட்சியொன்றை நடத்துதல்—போன்ற பல் வேறு சிறப்பு நிகழ்ச்சிகளை மகாநாட்டில் இடம்பெறச் செய்வதென்று நேற்றைய கமிட்டிக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## கூட்டணி-செந்தமிழர் இயக்கம் உறவுமுறியாது-வி. பி.

(யாழ்ப்பாணம்)

'செந்தமிழர் இயக்கம்', தமிழர் விடுதலைக் கூட்டணியுடனுன தனது உறவை முறித்துக்கொள்ளும் என்ற செய்தியில் ('ஈழநாடு' அல்ல) எதுவித உண்மையுமில்லை. இவ்வாறு செந்தமிழர் இயக்கப் பொதுச்செயலாளர் திரு. வ. பொன்னம்பலம் தமிழர் விடுதலைக் கூட்டணி செயல் அதிபர் திரு. அ. அமிர்தலிங்கத்திற்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

கூட்டணியுடனுன உறவை செந்தமிழர் இயக்கம் முறித்துக்கொள்ளும் என்று வெளி வந்த செய்திக்கும் தமக்கும் எதுவித தொடர்பும் இல்லை என்றும் திரு. பொன்னம்பலம் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார். [இ]

### 4-வது கிரிக்கெட் டெஸ்ட்

## பரபரப்பூட்டும் நிலையில் பாரத அணி வெற்றி!

### விளையாட்டு வீரர்களுக்கு பணம்; தங்க மோதிரங்கள்!

சென்னை, ஜன. 16

இந்திய-மேற்கிந்திய 4-வது கிரிக்கெட் டெஸ்டில் இந்தியா மூன்று விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

இந்தியக் கோஷ்டி 31 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை இழந்திருந்த நிலையில் இன்றைய ஆட்டத்தை ஆரம்பித்தது. விஸ்வநாத்தும், ஹக்கூவாட்டும் நிதானமாகத் துடுப்பெடுத்தாடி ஓட்டங்களின் எண்ணிக்கையை 74 ஆக உயர்த்தியபோது விஸ்வநாத் 31 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இதைத்தொடர்ந்து 84 ஓட்டங்களை இந்தியா பெற்றபோது, ஹய்கூவாட்டும் 21 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இதன்பின் துடுப்பெடுத்தாடிய இளம் வீரர் கப்பில்டே மின்னல் வேகத்தில் ஓட்டங்களை எடுத்தார் இவர் ஆட்டமிழக்காது 26 ஓட்டங்களை எடுத்தார். இதில் ஐந்து 'பவுண்டறிகள்' பெற்றது குறிப்பிடத்தக்கது.

மே. இந்திய ஆதிவேகப் பந்து வீச்சாளர்களான பிலிப், இளாக், கோல்டர் முறையே 3, 2, 2 விக்கெட்டுகளை வீழ்த்தினுர்கள்

ஸ்கோர் விபரம்: மே. இந்தியா 228, 151. இந்தியா 155, 125—7.

### தமிழ்நாடு அரசு வீரர்களுக்கு பரிசு

வெற்றிபெற்ற இந்திய ஆட்டக்காரர்களுக்கு தமிழ்நாடு அரசு தலா 2000 ரூபா பரிசாக வழங்கியது. இப்போட்டியில் சிறப்பாக விளையாடிய வீரர்களான கப்பில்டே. விஸ்வநாத், வெங்கடராகவன் ஆகியோருக்கு மேலும் 1000 ரூபா கூடுதலாகவும் வழங்கப்பட்டது. தமிழக அரசு அமைச்சரான பாண்டியன் இந்திய கோஷ்டி காப்டன் கவஷ்காருக்கும், வெங்கடராகனுக்கும் தங்கமோதிரம் அணிந்து கௌரவித்தார். 4-வது டெஸ்ட் போட்டியில் சிறந்த வீரருக்கான பரிசை வீரர் விஸ்வநாத் தட்டிக்கொண்டார்.

5-டெஸ்ட் போட்டி புதுடில்லியிலும் 6-வது டெஸ்ட் போட்டி கான்பூரிலும் நடைபெறவுள்ளது.

## பரஸ்பரம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காந்தி மேலும் கூறியதாவது:

ஒரு இடத்தில் இருந்து பார்க்கும் போது எமது எதிர்காலத்தைப் பற்றி ஒரு படம் தெரிகிறது. அதில் உங்கள் எண்ணங்கள் எல்லாம் பிரதிபலிக்கலாம். ஒரு அழகான பெண்ணை நினைத்தால் அவள் தோன்றுவாள், பிரதமராக வரவேண்டும் என்று நினைத்தால் அது தெரியும்.

இலங்கையின் வருங்காலத்தைப் பற்றிய படத்தை தான் நீங்கள் காணவேண்டும்.

உயர்சாதி, கீழ்சாதி என்னவாகப் போகிறது நண்பர்கள் ஆசிரியர்கள், இனத்தவர்கள் எல்லாம் இருக்கிறர்கள். இவர்களிடம் இருந்து எதனைப் பெறப்போகிறீர்கள். இவர்களிடம் எதையும் வாங்குபவராக இருப்பவர்கள் தான் சிறந்தவர்கள்.

நன்றி என்று சொல்வது சுலபமாக இருக்கிறதா? தெரியாது என்று சொல்வது கலபமாக இருக்கிறதா? தெரியாது என்று சொல்லுபவன் தான் அறிவாளி, தெரியும் என்று சொல்லுபவன் எதையும் தெரியாதவனுக இருக்கிறுன்.

நாங்கள் அவலப்படும் புதிய உலகத்தை சமைக்கும் புதிய மனிதர்களாக திகழ்வீர்கள் என்று நம்புகிறேன்

மோகன் பகவான் தாஸ் கூறியதாவது:- கராச்சியில் இராணுவ அதிகாரியாகஇருந்த எனது தந்தைக்கும் எனக்கும் ஏற்பட்ட மனஸ்தாபத்தால் ஈழத்தில் வாழ்ந்து வந்தேன். ஒருமுறை தந்தையைச் சந்திக்க கராச்சிக்கு சென்றேன். எனது தந்தை எதிலும் கட்டுப்பாடுடையவர். கோடீக்காரரும்கூட. அதனுல் நான் அவரைச் சந்திக்கும்போது என்ன அனர்த்தங்கள் நடக்குமோ என்று பயந்த நிலையில் அவரைச்சந்தித்தேன். என்னை அவர் அன்புடன் வரவேற்று உபசரித்தார். அவரைச் சந்தித்து இரு வருடங்களின்பின் எனது தந்தை உயிர்நீத்தார்.

இதே போன்று இங்கு வாழும் மக்களும் பரஸ்பரம் விட்டுக்கொடுத்து வாழ முன்வந்தால் எவ்வளவோ நன்மைகளைப் பெறமுடியும் என்று அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

ஒரு காலத்தில் அரசியல் எதிரிகளாக இருந்த வட அயர்லாந்தும், இந்தியாவும் கூட இன்று ஒற்றுமையாக இருக்கிறது. விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை உடைய சமூகமே நாம் அமைக்கும் புதிய சமுதாயமாகும்.

[கொக்-நிருபர்]

## இந்தியா...

1-ம் பக்கத் தொடர்ச்சி)

தூரம் பின்தங்கியிருந்தாலும், ஜனநாயக முறைப்படி அவன் தனது உரிமைக்குரலை எழுப்ப முடியும். இந்த உரிமையைக் கொண்டு ஒரு சிலர் திறமைசாலிகள் என்ற எண்ணத்தில் ஜனநாயகம் பேசுகிறுர்கள். ஆனுல் உண்மையில் அவர்களிடம் திறமை இருப்பதில்லை. அப்படி ஒருவரிடம் திறமை இருந்து ஜனநாயகத்தைசெயல்படுத்த முன்வரும் போது அவரது சாகசி அவரின் பின்னுல் இருந்து கொண்டு சிறுசிறு குழுக்களாக இயங்கி ஜனநாகத்திற்கு மாருகச் செயல்பட்டு தனது தலைவனது பெயரையும், ஜனநாயகத்தின் பெயரையும் கெடுக்கிறுர்கள்' என்றும் கூறினுர்.

(கொக்குவில் நிரு)